# இங்கிருந்தும்

இதழ் : 01

திரைப்பட சஞ்சிகை




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுள் என்ன மாற்றமோ...
# திரைப்பட இயக்குனரிடமிருந்து



**நீங்கள் இத்திரைப்படத்துறையைத் தெரிவு செய்தமைக்கான காரணம்:**

✍ ஈழத்தைப் பொறுத்தவரை திரைப்படத்துறையானது ஒரு நலிவுற்ற கலையாகக் காணப்படுவது கசப்பான உண்மையாகும். இருப்பினும் நான் இத்துறையை மிகவும் நேசிப்பவன் என்பதாலும் யாழ்ப்பாணத்தில் மீண்டும் ஒரு சினிமா வளர வேண்டும் என்கின்ற நீண்ட நாள் அவாவின் காரணத்தாலுமே ஆகும். இருப்பினும் இதை ஆரம்பிப்பதில் பல சவால்கள் காணப்பட்டன. இருந்த போதிலும் எனது நண்பர்களின் துணையுடன் நானே களத்தினுள் இறங்கி விட்டேன்.

**நீங்கள் இத்துறையை முன்னெடுத்துச் சென்ற போது சமூகத்தவர்கள் உறவினர்களின் கருத்துக்கள் எவ்வாறாக இருந்தது. ?**

✍ ஆம் திரைப்படம் ஒன்றை உருவாக்க இருக்கிறேன் என்றதும் பலராலும் கேட்கப்பட்ட கேள்விகள் ஈழத்திலும் திரைப் படங்களை உருவாக்க முடியுமா ? அதற்குப் பெருந்தொகையான பணம் செலவாகுமே, கலைஞர்களை எங்கே தேடுவது போன்று பலவாறாகக் கேட்டார்கள். அதில் உண்மையும் இருந்தது. இருந்தும் இவ்வாறான சவால்களிற்கு எல்லாம் முகம் கொடுத்து படப்பிடிப்பு ஆரம்பமாகி நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில்தான் அவர்களிற்கும் எல்லாம் முகம் கொடுத்துப் படப்பிடிப்பு ஆரம்பமாகி நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையிலதான் அவர்களிற்கும் ஒரு நம்பிக்கை உருவாகியது. எனது நண்பர்கள், சமூகத்தவர்கள், உறவினர்கள், எனக்கு ஊக்குவிப்பையும் உற்சாகத்தையும் வழங்கினார்கள்.

**என்னுள் என்ன மாற்றமோ... திரைப்படத்தில் முற்று முழுதாக எமது மண்ணின் கலைஞர்களே நடித்துள்ளார்கள். என்கிறீர்கள். அவர்களை எவ்வாறு இனங்கண்டு தேர்ந்தெடுத்தீர்கள்?**

✍ திரைப்படத்திற்கான திரைக்கதை மற்றும் இதர வேலைகள் முடிவடைந்த நிலையில் நடிக நடிகையரைத் தெரிவு செய்வது சற்றுச் சிரமமாகவேதான் இருந்தது. ஏன் என்றால் கதைக்கேற்ப பாத்திரமாக இருக்கவேண்டியது அவசியம். இருந்த போதிலும் நாம் பத்திரிகை மூலமாக விளம்பரங்களைவெளியிட்டுக் கலையார்வம் மிக்க கலைஞர்களை ஒன்றிணைத்து அவர்களின் கலைத்திறமைகளை வெளிக்கொணர்ந்தோம். அதிலும் சிறப்பாக செயற்பட்டவர்களை தெரிவு செய்து அவர்களிற்கு நடிப்பு சார்ந்த பயிற்சிகள் மற்றும் படப்பிடிப்பு சார்ந்த விடயங்களைத் தெளிவுபடுத்தி அவர்களை தயார்ப்படுத்தினோம்.

இந்தத் திரைப்படத்தின் இயக்குநர் நான் என்ற வகையில் கூறுகின்றேன். ' என்னுள் என்ன மாற்றமோ" .... திரைப்படத்தில் நடித்த அத்தனை கலைஞர்களுடைய நடிப்பு திறமையானது சிறப்பான முறையில் வெளிக் காட்டப்பட்டுள்ளது என்பதை கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

> **இந்த திரைப்படத்தின் இயக்குனர் நான் என்ற வகையில் கூறுகின்றேன். " என்னுள் என்ன மாற்றமோ ...." திரைப்படத்தில் நடித்த கலைஞர்களுடைய நடிப்புத் திறமையானது சிறப்பான முறையில் வெளிக்காட்டப்பட்டுள்ளது என்பதை கூறிக்கொள்ள விரும்புகிறேன்.**

**"என்னுள் என்ன மாற்றமோ".....நீங்கள் இயக்குனராக இருந்து கொண்டு கதா நாயகனாக நடித்தமை பற்றிக் கூறுங் கள்?**

✍ எனக்கு நடிப்புத்துறையில் ஆர்வம் காணப்பட்டாலும் இயக்குனராக இருந்து கொண்டு நடிப்பைப்பற்றி நான் சிந்திக்கவில்லை. எனினும் படத்தில் வரும் திரைக் கதைக்கேற்ப மாறுபட்ட பல நடிப்புக்களை வெளிப்படுத்த வேண்டிய சந்தர்ப்பம் காணப்பட்டது. ஆகவே நான் தெரிவு செய்த கலைஞர்களிற்கு எனது கதையைச் சொல்லி அவர்களை நடிக்க வைப்பது சற்று சிரமமாகவே இருந்தது. எனவே நண்பர்களின் யோசனைக்கமையவும், திரைக்கதையைப் பூரணமாக விளங்கிக் கொண்டதன் காரணத்தினாலும் நானே நடிக்கலாம் என முடிவு செய்தேன்.

முதல் நாள் படப்பிடிப்பின் போதே இரண்டு பணிகளையும் செய்தது கடினமாகக் காணப்பட்டது. ஒரு கட்டத்தில் அகலக்கால் வைத்து விட்டேனோ என்றும் எண்ணினேன். ஏனென்றால் படப்பிடிப்பு நேரத்தில் இயக்குனர் என்பவரே முழுவேலைகளையும் பொறுப்பெற்றுச் செயற்படுத்த வேண்டும். மற்றும் நடிகனாக இருந்து கொண்டு பாத்திரமாகவும் மாறி நடிக்கவும் வேண்டும். ஆகவே இவை இரண்டு பணிகளையும் செய்வது பெரும் சவாலாகக் காணப்பட்டது. இருப்பினும் இவை இரண்டையும் சிறப்பாகச் செய்து முடித்த திருப்தி காணப்படுகிறது.

**எதிர்காலத்தில் உங்களின் "நல்லூரான் பிக்சர்ஸ்" நிறுவனம் ஊடாக எவ்வாறான படைப்புகளை வெளியிடுவதற்கு இருக்கிறீர்கள்.?**

✍ ஆம் எதிர்வரும் காலங்களில் யாழ்ப்பாணத்தில் மட்டுமல்ல உலகம் பூராகவும் பேசக் கூடிய வகையில் பல திரைப்படங்களை உருவாக்கத் திட்டமிட்டுள்ளோம். நான் நடிகனாக இல்லாமல் ஒரு இயக்குனராக மட்டுமே முற்று முழுதாக இருக்க ஆசைப்படுகிறேன் நாம் இப்போதே அடுத்த திரைப்படத்திற்கான திரைக்கதை சார்ந்த திட்டமிடல்களை மேற்கொண்டு வருகின்றோம். எமது இந்த திரைப்படம் வெளியிடப்பட்ட சில தினங்களிலேயே நாம் எமது அடுத்த திரைப்படம் சார்ந்த வேலைகளை ஆரம்பிக்க இருக்கின்றோம் . இச்சந்தர்ப்பத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் கூறிக் கொள்ள விரும்புவது என்னவென்றால் எமது மண்ணில் கலையார்வம் மிக்க கலைஞர்கள் உடனடியாக எம்மோடு இணைந்து செயற்பட வருமாறு கேட்டுக் கொள்கிறோம்

**இறுதியாக உங்களிடம் வருகின்ற கலைஞர்களுக்கு நீங்கள் கூறிக் கொள்ள விரும்புவது ?**

✍ ஆம் நாம் அடுத்த திரைப்படத்தை ஆரம்பிப்பதற்கு இருக்கின்றோம். அதற்குக் கதாநாயகன் , கதாநாயகி உட்பட குணசித்திர நடிகர்கள் முதல் நாம் எமது கலைஞர்களுக்கு முற்றுமுழுதான சந்தர்ப்பம் வழங்க இருக்கின்றோம். எனவே சினிமா உலகில் சாதிக்க ஆசைப்படுகின்ற எல்லோரும் எம்முடன் இணைந்து பணியாற்ற வருமாறு கேட்டுக் கொள்கின்றோம். மேலும் தொழில்நுட்பம் சார்ந்த திறமைகள், டப்பிங் பேசக் கூடியவர்கள் , மேக்கப் செய்பவர்கள் என எல்லாத் துறையினரையும் நாம் எம்முடன் இணைந்து பணியாற்ற அழைக்கின்றோம்.

**சகல தொடர்புகளுக்கும்:**
Nalluranpictures@gmail.com
**T.P: 0772850490**



## உதவி இயக்குனர் உள்ளத்திலிருந்து...

நல்லூரான் பிக்சர்ஸ் நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்டு விரைவில் வெளிவர இருக்கும் “ என்னுள் என்ன மாற்றமோ” திரைப்படக் குழுவினரோடு இணைந்து பணியாற்றுவதற்கு எனக்கும் சந்தர்ப்பத்தினை வழங்கிய சிறந்த இயக்குனர் அதற்கும் மேல் ஒரு நடிகரும் நல்ல நண்பருமான கவிமாறன் அவர்களுக்கு எனது நன்றிகள்.

இந்தச் சினிமாத்துறை என்பது ஒரு குடும்ப வாழ்க்கை போன்றது. பல அனுபவங்கள். பல பதிய நட்புகள் எனப் பல விடயங்களைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கும். அதற்கான விடயங் களையும் எனக்குக் கற்றுத் தந்தது நல்லூரான் பிக்சர்ஸ். அதற்கும் எனது நன்றிகள்.

இன்றைய சினிமா என்றாலே பலர் வரவேற் கிறார்கள் சிலர் அதனை வெறுக்கிறார்கள். ஏனென்று தெரியவில்லை. சினிமாத்துறையானது இன்று பலருடைய புகழுக்கும், பலருடைய வளர்ச்சிக்கும் பெரிதும் ஊன்றுகோலாக, அமைந்திருக்கின்றது என்பது யாரும் அறிந்ததே.

இப்படிப்பட்ட சினிமாத்துறையை ஏன் நாங்கள் சமயம், சடங்கு, சம்பிரதாயம் என்று சொல்லிச் சொல்லியே எங்களை நாங்களே குறைத்து மதிப் பிட்டுக் கொள்ளுகின்றோம். எதையும் உருவாக்க முயற்சிப்பதில்லை. பிறர் செய்தால் மட்டுமே அதைப்பற்றி பெருமையாகப் பேசுகின்றோம். ஏன் எங்களால் முடியாதா? முடியும். ஆனால் நாங்கள் பிறருடைய வெற்றிகளுக்குக் கைகளைத் தட்டு கிறோம். பிறருக்குப் பாராட்டுத் தெரிவிக்கிறோம். பிறரிடம் கை கட்டி கை நீட்டிப் பழகிவிட்ட எங்கள் சமுதாயத்தை மாற்றியமைக்க வேண்டும்.

இன்றைய நவீன உலகில் மீடியாக்களின் வளர்ச்சி உச்ச நிலை அடைந்துள்ளது. எங்களை நாங்களே உலகுக்கு எடுத்துக்காட்ட வேண்டிய காலம், நேரம் எல்லாம் சாதகமாக அமைந்து கொண்டிருக்கிறது.

அந்த முயற்சியாகத்தான் யாழ் மண்ணில் நல்லூரான் பிக்சர்ஸ் என்ற விதை நாட்டப்பட்டுள்ளது. அந்த விதை ஆலமரம் போல் விழுதுகள் விட்டு விருட்சமாவதற்கு எல்லோரும் இணைந்து உழைக்க வேண்டும். அதன் மூலம் உலகுக்கு எங்களை நாங்கள் எடுத்துக் காட்ட வேண்டும். இது எனது ஆசை மட்டுமல்ல பல கலைஞர்களின் பிரார்த்தனையும் கூட.

எத்தனை கலைஞர்கள் தங்களுக்குள் உள்ள திறமைகளை வெளிக்கொண்டு வருவதற்குச் சிறந்த களம் கிடைக்காமல் அவர்களோடு அவர்கள் திறமை களும் மண்ணுள் புதைந்து போகிறது. அப்படியில் லாமல் நம்மாலும் சாதிக்க முடியும். அதற்கு நல்லூ ரான் பிக்சர்ஸ் எங்களுக்குத் துணை இருக்கும் என்ற நம்பிக்கையோடு அனைத்துக் கலைஞர்களும் இனி நல்லூரான் பிக்சர்ஸ்சோடு கைகோர்த்து எங்கள் கனவுகளை நனவாக்குவோம்.

யாழ் மண் கலை மண்ணாக வளர நல்லூரான் பிக்சர்ஸ் வழிவகுக்கும் என்ற நம்பிக்கையோடு காத்திருக்கின்றோம்.



எமது “நல்லூரான் பிக்சர்ஸ்” நிறுவனமூடாக ஒரு வருடத்திற்கு ஒரு திரைப்படம் மற்றும் இரண்டு குறுந்திரைப்படங்களை தயாரித்து வெளியிடு வதற்கு திட்டமிட்டுள்ளோம். எனவே எதிர்காலத்தில் குறும்படங்களை தயாரிப்பதில் ஆர்வமுள்ளவர்கள் குறும்படத்திற்கான திரைக்கதையுடன் எம்மைத் தொடர்பு கொள்ளுமாறும் உங்களுக்கான சகல உதவி ஒத்துழைப்புக்களை நல்லூரான் பிக்சர்ஸ் நிறுவனம் வழங்கும் என்பதனையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரைப்படத்திலிருந்து சில காட்சிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## அன்புசார் பெருந்தகைகளிற்கு!

நல்லூரன் பிக்சர்ஸ் திரைப்பட நிறுவனத்தின் தயாரிப்பான "என்னுள் என்ன மாற்றமோ" எனும் திரைப்படம் வெளிவருவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றோம். திரைப்படம் மனிதனை மனிதனாக வாழ வைக்கும் ஒரு ஊடகத்துறை. தொழில்நுட்பம் வளர்ச்சி அடைந்திருக்கும் இக் காலத்தில் திரைப்படங்கள் சமுதாய முன்னேற்றத்திற்கு வழி சமைக்க வேண்டியது அவசியமாகும். தென்னிந்தியாவிலிருந்து திரைப்படம் வெளிவரும் நிலையில் அதற்கு இணையாக யாழ்ப்பாணத்தில் வருவது வரவேற்கத்தக்கது. யாழ்ப்பாணத்தின் கலை, கலாசாரப் பண்புகளைத் திரைப்படத்தினூடாக வெளிவருவது இயக்குனரின் கடமையாகும் திரைப்படம் எழுதியமைத்துள்ள சி. கவிமாறன் அவர்களை வாழ்த்துகின்றோம் இந்நிறுவனத்தின் அனைத்து அன்பு உள்ளங்கள் அனைவருக்கும் இறைவனின் ஆசீர்வாதம் கிடைப்பதாக.........!

- என்றும் வேண்டும் இன்ப அன்பு -


## எமது கலை ரசிக உள்ளங்களிற்கு...



தென்னிந்தியக் குப்பை கூளங்களால் நிரம்பி வழிகின்றது. ஈழத்து இலக்கிய உலகம். இதன் துர்நாற்றம் தொலைக்காட்சி எனும் ஜன்னல் வழியே மனித மனங்களைச் சீரழிக்கிறது. ஒரு காலத்தில் இலங்கை வானொலியின் தமிழ் ஒலிபரப்புச்சேவை இலங்கைக் கலைஞர்களுக்கும் களம் அமைத்துக் கொடுத்தது. சுமார் முப்பது வருடங்களுக்கு முன் சனி,ஞாயிறு தினங்களில் இடம் பெறும் சிறப்பான வானொலி நிகழ்ச்சிகளுக்காக என் பன்னிரண்டாவது வயதில் வாராந்தம் தவமிருந்த நினைவுகள் இன்றும் இனிக்கின்றன. எல்லாமே கனவுகளாகிப் போய்விட்டன.

தற்போது துடிதுடிப்பான ஈழத்து இளங்கலைஞர் பல்கலைக்கழக நுண்கலைப்பீட மாணவன் கவிமாறனின் புதிய முயற்சி சற்று ஆறுதலைத் தருகின்றது. இவரது "என்னுள் என்ன மாற்றமோ" எனும் திரைப்படம் புகழ் மணம் வீச வாழ்த்துகிறேன். இவரது முன்மாதிரியான இலக்கிய முயற்சிக்கு உதவிய– உதவுகின்ற நல்ல உள்ளங் களிற்கும் நன்றிகள் உரித்தாகட்டும். இப்படத்தில் ஒரு கௌரவ வேடத்தில் நடிப்பதற்கு எனக்கும் வாய்ப்புக் கிடைத்தமைக்காக இறைவனுக்கு என் நன்றிகளைத் தெரிவிக்க விரும்புகின்றேன்.

இரா. ஜெயக்குமார்
அதிபர்.
யாழ் மயிலனை சைவ மகா வித்தியாலயம்.



நல்லூரான் பிக்சர்ஸ்!

## என்னுள் என்ன மாற்றமோ ?

## என் இனிய கலைரசிக நெஞ்சங்களுக்கு வணக்கம்

நான் என்றும் நேசிக்கின்ற இந்த மண்ணும், மண்ணோடு சார்ந்த எத்தனையோ ஆன்மீக நெஞ்சங்களின் புனிதபூமி மையம் நல்லூர் நாமம் தாங்கிய கலையகத்தின் கன்னிப்படைப்பே "என்னுள் என்ன மாற்றமோ" கடந்து போன காலங்களில் ஈழத்துத் தமிழ் சினிமா வரலாற்றில் அவ்வப் போது தூவப்பட்ட ஒரு சில துளிகளி லிருந்து வேறுபட்டு நீண்டதொரு தூரப்பார்வையோடு என்னாலும் முடியும் என்னுள் ஒரு மாற்றத்தைக் காண என எண்ணிய இளம் கலைஞன் கவிமாறன் துணிவோடு சக கலைஞர்களோடு கைகோர்த்துக் கொண்டு புதிய பாதையில் பெரியதடம் பதித்துள்ளார். காதல் அழிவதில்லை, அது ஒரு தெய்வீகமானது, உண்மைக்காதல் புனிதமானது. என்றும் போற்றுதற்குரியதுமான காதலை கருப்பொருளாக்கி அதில் அத்தி வாரமிட்டுத் தன்விடாமுயற்சியை மூலதனமாக்கி அழகுற கட்டி முடிக்கப்பட்ட சினிமாக்கலை வடிவம் "என்னுள் என்ன மாற்றமோ ?" இளைஞர்களின் இதயங்களில் சிம்மாசனமிட்டு வெண்சாமரம் வீசும். இந்தக்கலை வரண்ட இம்மண்ணில் இலைமறை காயாக மறைந்து கிடந்த கலைஞர் கட்கு நம்பிக்கை என்னும் நீர்ப்பாய்ச்சி பூமியைக் கிழித்துக் கொண்டு புறப்பட்ட வித்துக்களுக்கு ஊன்று கோல் போல் கை கொடுத்துக் கை தூக்கி விட்ட கலையகம் நல்லூரன் பிக்சர்ஸ். கலைத்தாகத்தில் நாவரண்டு உன் நிழலில் ஒதுங்கிய, ஓய்வெடுத்த கலைஞர்களில் நானும் ஒருவன். தமிழ் வைத்தியர் பாத்திரத்தில் வரண்ட நாவிற்குத் தாகசாந்தி செய்து கொண்டேன். நன்றிகள் கோடி. ஈழத்துத் தமிழ் சினிமாவில் இன்னும் எத்தனையோ மாற்றங்களைக் காண வேண்டும் என்ற கனவோடு நிறைவு செய்து கொள்கின்றேன்.

நன்றியுடன்: கோகிலம் சிவா, சுப்பிரமணியம்
( தமிழ் வாத்தியார்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைத் தமிழ் திரைப்படத்துறை

இலங்கைத் திரைப்படத்துறை வரலாற்றில் இலங்கையில் வெளிவந்த முதல் தமிழ்த் திரைப்படம் 29.12.1951 இல் திரையிடப்பட்ட குசுமலதா என்றே கருதப்படுகின்றது. இப்படம் தென்னிந்திய திரைப்படக் கலையகத்தில் வைத்துத் தயாரிக்கப் பட்டு 21.01.1947 இல் இலங்கையில் திரையிடப்பட்ட சங்கவுனு பிலித்துற என்ற சிங்களப் படத்தின் தமிழ்மொழி மாற்றுப் படம். இப்படத்தில் இன்றைய சிங்களத் தம்பதிகளும் முன்னனி நடிகர்களுமான எடிஜயமன்னவும் ருக்மணிதேவியும் நடித்திருந் தார்கள். தமிழில் மொழி மாற்றம் செய்யப்பட்ட போது இதற்குக் குரல் கொடுத்தவர்கள் தென்னிந்தியக் கலைஞர்களாகவே இருக்கிறார்கள். ஆதலால் குசுமலதா என்ற இந்தத் திரைப்படம் இலங்கையில் தயாரிக்கப்பட்ட முதல் திரைப்படமாக எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. சில ஆண்டுகள் கழித்துத் தமிழில் அண்ணாதுரை எழுதிய வேலைக்காரி என்ற நாவலைத் தழுவித் திரைக்கதை அமைக்கப் பட்டு சமுதாயம் என்ற பெயரில் தமிழ்த் திரைப்படம் வெளியிடப்பட்டது. தயாரிப்பாளரான ஹென்றி சந்திரவன்ச இப்படத்திற்கு இயக்குநரா கவும் பணியாற்றினார். சமுதாயம் திரைப்படத்தை 35.மி.மீ பிலிமில் எடுப்பதாகவே ஆரம்பத்தில் திட்டமிடப் பட்டிருந்தாலும் படத்தைத் தயாரிக்க ஏற்பட்ட பொருளாதாரப் பிரச்சனையால் இப்படம் 16 மி.மீ பிலிம்மில் தான் வெளிவந்தது. இந்த சமுதாயம் படம் தான் முதல் இலங்கைத் தமிழ் திரைப்படமாக எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப் பெற்றது.

## சினிமா என்பது ஒரு உன்னத கலையாகும்

சினிமா என்பது ஒரு உன்னத கலையாகும். எல்லாக் கலைகளையும் தன்னுள்ளே அடக்கி வைத்திருக்கும் பிரபல மான கலையாகும். வேடிக்கையாக ஆரம்பித்த சினிமா வேகமாக உலகமெல்லாம் பரவி அனைவரையும் கவர்ந்து ள்ளது. இந்தச் சினிமா கலைரீதியாகவும் தொழில் ரீதியாகவும் எமது இலங்கையிலும் சளைத்து விடவில்லை. சர்வதேச விருதுகளைப் பெறுமளவிற்குப் பல சிங்களப் படங்கள் உருவாகி யுள்ளன. அந்தப் படங்களை நம்பியே பல கலைஞர்கள் முளைக்கத் தொடங்கி விட்டார்கள்.

1950ம் ஆண்டளவில் இலங்கையில் தமிழ் திரைப்படத் தயாரிப்பு முயற்சிகள் ஆரம்பமாகிவிட்டன. இதுவரை 50க்கு மேற்பட்ட தமிழ் படங்கள் உருவாகியுள்ளன. அவற்றில் 36 படங்கள் மட்டுமே திரைக்கு வந்துள்ளன.

இலங்கையில் உருவான தமிழ் படங்களை நான்கு வகைப் படுத்தலாம்.

01. குறுந்திரைப்படம்
02. சிங்களத்திலிருந்து தமிழுக்கு மாற்றப்பட்டவை (டப் படங்கள்)
3. தமிழ் மொழிப் படங்கள்
4. இலங்கை - இந்திய கூட்டுத்தயாரிப்புக்கள்

"சமுதாயம்", "பாச நிலா" ஆகிய இரண்டு படங்களும் 14 மில்லி மீட்டரில் தயாரிக்கப்பட்ட குறுந் திரைப்படங்கள் ஆகும்.

"கலியுக காலம்", நான்கு லட்சம்", "யாரவள்", சுமதி எங்கே", "ஒருதலைக்காதல்", "பனி மலர்கள்", " இவளும் ஒரு பெண்" "அஜா சத்த" போன்ற படங்கள் சிங்கள மொழியிலிருந்து தமிழுக்கு டப் செய்யப்பட்டவை அகும்.

தோட்டக்காரி, கடமையின் எல்லை, டாக்ஸி டிரைவர், நிர்மலா, மஞ்சள் குங்குமம், வெண்சங்கு, குத்துவிளக்கு, மீனவப் பெண், புதிய காற்று, கோமாளிகள், பொன்மணி, காத்திருப்பேன் உனக்காக, நான் உங்கள் தோழன், வாடைக்காற்று, தென்றலும் புயலும், தெய்வம் தந்த வீடு, ஏமாளிகள், அனுராகம், எங்களில் ஒருவன், மாமியார் வீடு, நெஞ்சுக்கு நீதி, இரத்தத்தின் இரத்தமே, அவள் ஒரு ஜீவ நதி, நாடு போற்ற வாழ்வு, பாதை மாறிய பருவங்கள், சர்மிலாவின் இதய ராகம் போன்ற 26 படங்களும் முழு நீளப்படங்கள் ஆகும்,


நான் உங்கள் தோழன்,

பைலட்பிரேம்நாத், தீ, நங்கூரம், மோகனப் புன்னகை, வசந்தத்தில் ஒரு வானவில், போன்ற படங்கள் இலங்கையில் எடுக்கப்பட்ட இந்தியப் படங்கள். இவற்றுடன் இலங்கைக் கலைஞர்களுக்குத் தொடர்பு இருந்தாலும் தயாரிப்பு என்ற ரீதியில் இவை இந்திய படங்களே.

வசதிகள் அதிகமற்ற அந்தக் காலத்திலேயே இலங்கையில் இத்தனை தமிழ்படங்களை உருவாக்கியிருக்கின்றார்கள் என்றால் இவர்கள் எத்தனை கெட்டிக்காரர்கள், அவர்களின் முயற்சிகள் எத்தனை பெருமை வாய்ந்தவை.

முதலாவது சிங்களம் பேசும் படம் 1956 ல் வெளியான "கடவுனு பொறந்துவ" (உடைந்த உறுதிமொழி) இந்தப் படத்தைப் பொறுத்த வரை தமிழ் பேசும் நாம் பெருமைப் படலாம். ஏனெனில் அந்தப் படத்தைத் தயாரித்தவர் தமிழரான எஸ். எம். நாயகம் என்பவரே இலங்கையில் முதலாவது சிங்களப் படத்தை தயாரித்தவர் தமிழர் என்பது போல் முதலாவது தமிழ் படத்தைத் தயாரித்தவர் சிங்களவரே.

நன்றி:
இலங்கை தமிழ் சினிமாவின் கதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org














Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Cawery Silks

Dealers In Textiles,
Specialist in
Wedding Sarees



Cawery Silks

48, Grand Bazaar, Jaffna T.P 2222333

# அல்பா மிக்சர்

மக்களின் மனதில் ஓர் இடம் பிடித்த முதல் தரமான 'அல்பா மிக்சர்' மற்றும் பலவிதமான உணவு பண்டங்கள் உங்கள் வீடுகளில் நடைபெறும் கொண்டாட்ட நிகழ்வுகளுக்கு தேவையான (Sweets) மற்றும் மிக்சர் வகைகளும் பெற்றுக்கொள்ள முடியும்.



இங்கு "அல்பா விருந்தினர் விடுதி" உள்ளது.
A/C மற்றும் NOn A/C அறைகள்.

பிரதான கிளை
பக்ஸ் லேன் உடுவில் றோட்
மானிப்பாய்
T.P.021 - 2226695

உப கிளைகள்
பரமேஸ்வரச்சந்தி, பலாலி வீதி
யாழ்ப்பாணம்
மல்லாகம் சந்தி, சங்கானை

# அன்னா தொழிலகம்

## இணுவில்

ESTD 1939
ANNA

பாலூட்டும் குழந்தைகளுக்கும் சிறுவர்களுக்கும்
ஏற்ற உன்னத சத்துணவு

## ஜீவாகாரம்



100 கிராம் ஜீவாகாரத்தில் 16.5 கி.புரதமும் 400 கி கலோரி சக்தியுமுள்ளது. ஜீவாகாரமானது. ஆரம்பமுதலுணவு கொடுக்கத் தொடங்கிய குழந்தைகளுக்கு - அதாவது 4மாத வயது பூர்த்தி போஷாக்கில்லாத பிள்ளைகளுக்கும். கர்ப்பிணித் தாய்மார்களுக்கும். பாலூட்டும் தாய்மாார்களுக்கும் இலகுவில் சமிபாடடையக் கூடியதும். விரும்பி உண்ணக்கூடியதுமான அதி சிறந்ததோர் உபஉணவாகும். அத்துடன்

தயாரிப்பாளரும், விநியோகஸ்தரும்
அன்னா தொழிலகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org